பக்கங்கள் 12 + 06

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 08 செவ்வாய்க்கிழமை 21.05.2024 அதிர்வு 295

## 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

இலங்கையில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பதுளை, கொழும்பு, கம்பஹா, 04▶

## தலைமறைவான டயனா நீதிமன்றில் ஆஜர்

### இராஜதந்திரக் கடவுச்சீட்டு வழக்கில் பிணையில் விடுவிப்பு

இராஜதந்திரக் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டமை தொடர்பில் சந்தேக நபராகக் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அவர் இன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சட்டத்தரணிகளுடன் ஆஜராகியபோதே பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக நேற்று இடம்பெற்ற நீதிமன்ற அமர்வின்போது டயனா கமகேவைக் காணவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தனர்.

இதனையடுத்தே அவர் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்தார்.



## அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறலில் எந்தவித முன்னேற்றமும் இல்லை!

### அதனால் நல்லிணக்கம் இன்னமும் சாத்தியமாகவில்லை என

### சுவிஸ் தூதுவருடனான சந்திப்பில் மனோ எம்.பி. சுட்டிக்காட்டு





"அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல் ஆகிய இரண்டு விடயங்களிலும் எவ்வித அர்த்தபூர்வ முன்நகர்வும் அரச தரப்பில் செய்யப்படாத காரணத்தால், நல்லிணக்கம் இன்னமும் சாத்தியம் ஆகவில்லை. இவை இத்தனை தூரம் இழுப்பட்டுப் போவதற்குச் சர்வதேச சமூகமும் காரணமாக அமைந்து விட்டது."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி., தன்னைச் சந்தித்து உரையாடிய இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் கலாநிதி திருமதி சிரி வோல்ட்டிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

04▶

## குழு மோதலில் குடும்பஸ்தர் கொலை!

(ராமு தனராஜா)

இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெமோதர நெதர்வில் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

38 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இரு குழுக்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலவி வந்த வாக்குவாதம் நேற்று இரவு மோதலாக மாறியது என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.



கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட சவள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் இருவரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் தெமோதர கிராமிய வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நீதிவான் பரிசோதனையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்குச் சடலம் எடுத்துச் செல்லப்படவுள்ளது.



# காட்டு யானை - மனித மோதலை கட்டுப்படுத்த மாதிரித் திட்டங்கள்

காட்டு யானை – மனித மோதல் அதிகம் உள்ள கிராமங்கள் மற்றும் விளைநிலங்களைப் பாதுகாக்க, தற்காலிக விவசாய மின் வேலி மற்றும் கிராம மின் வேலி என்ற இரண்டு மாதிரித் திட்டங்களைத் தொடங்க அரசு திட்டமிட்டுள்ளது.

காட்டு யானை – மனித மோதல்களைக் கட்டுப்படுத்த அண்மைக் காலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் துறைசார் நிறுவனங்களின் தலைவர்களுடன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது.

இங்கு யானை – மனித மோதல்கள் அதிகம் உள்ள பகுதிகளில் இந்த மோதல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு பராமரிக்கப்படும் மின்சார வேலிக்கு மேலதிகமாக, மோதல்கள் அதிகம் இடம்பெறும் மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னோடித் திட்டமாக விவசாய நிலங்களைப் பாதுகாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அறுவடை மேற்கொள்ளப்படும் சமயம் வரை மாத்திரம் உரிய விவசாய நிலங்களைப் பாதுகாக்க தற்காலிக விவசாய மின்வேலி அமைப்பதில் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், காட்டு யானை – மனித மோதல்கள் அதிகம் உள்ள கிராமங்களைப் பாதுகாக்கும் வகையில் கிராமத்தைச் சுற்றி அமைக்கப்படவுள்ள மின் வேலிக்கான முன்னோடித் திட்டம் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

மேலும், சம்பந்தப்பட்ட விவசாயிகள் விவசாய பணிகளைத் தொடங்கும் நேரத்தில் அறுவடை செய்த பின் விவசாய மின் வேலியை அகற்ற வேண்டும் எனவும், மின்வேலியின் பராமரிப்பு மற்றும் பொறுப்பை கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்குவதுடன், கிராம வேலியின் பொறுப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு வழங்குவது எனவும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

பல்வேறு கலாசார நிகழ்வுகள் மற்றும் பெரஹரா என்பவற்றுக்காக யானைகளை வழங்குகையில் தனியாரிடமுள்ள யானைகளுக்கு மேலதிகமாக, பழக்கப்பட்ட யானைகளைக் கொண்ட பட்டியலொன்றைப் பேணுவது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தத் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் எழும் சிக்கல்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கையளிப்பதற்காகத் தயார்படுத்துமாறும் சாகல ரத்தாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க மற்றும் துறைசார் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் காட்டு யானைகள் மனிதக் கட்டுப்பாட்டுக் குழுவின் உறுப்பினர்களான கலாநிதி சுமித் பிலபிட்டிய, கலாநிதி பிரிதிவிராஜ் பெர்னாண்டோ ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.







# மறுமலர்ச்சிக்காக ஒன்று திரளுங்கள்; சிரேஷ்ட பிரஜைகள் மாநாடு மகரகமவில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை ஓய்வூதிய சிரேஷ்ட பிரஜைகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த தேசிய மறுமலர்ச்சிக்காக ஒன்று திரளுங்கள் எனும் தொனிப்பொருளிலான மாநாடு மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்கா மாநாட்டுக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த மாநாட்டுக்கு நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து சிரேஷ்ட பிரஜைகள் கலந்து கொண்டனர்.





# சம்மாந்துறை ஆஸ்பத்திரியில் வைத்தியர் விடுதிக்குக் கட்டடம்

## நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

(றியாஸ் ஆதம்)

சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வைத்தியர்களுக்கான விடுதிக் கட்டடத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் கடந்த வெள்ளிக்கிழமை (17) உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

பதில் வைத்திய அத்தியட்சகரும், மகப்பேற்று வைத்திய நிபுணருமான டாக்டர் எல்.சி.ஆர்.றொஹான் தலைமையில் இடம்பெற்ற, இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சத்திர சிகிச்சை நிபுணர் என்.அகிலன், பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ்.ஷாபி, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர். நியாஸ் அஹமட், வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் தலைவர் டாக்டர் ஏ.இஸ்ஸடீன் உள்ளிட்ட வைத்தியர்கள், வைத்தியசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

சம்மாந்துறை ஆதார வைத்திய சாலையில் வைத்தியர்களுக்கன விடுதி வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு 20மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் முதலாம் மாடிக்கான நிர்மாணப் பணிகளுக்காக தற்போது 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போலிச் செய்திகளை நம்பாதீர்கள்! நாளை பாடசாலைகள் இயங்கும்!!

## கல்வி அமைச்சு அறிவிப்பு



நாடு முழுவதும் உள்ள பாட- சாலைகளின் கல்வி நடவடிக்கைகள் நாளை வழமை போன்று இடம்பெறும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள் ளது.

நிலவும் சீரற்ற காலநிலையால் நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு நாளை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்று சமூக வலைத்தளங்களில் வெளி யாகியுள்ள செய்தி போலியானது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சு இன்று வெளி யிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளை நடத்துவது தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர்கள் மற்றும் மாகாணக் கல்வி பணிப்பாளர்கள் வசம் உள்ளது என்றும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# கல்லால் தாக்கி மனைவியை கொலைசெய்த கணவர் கைது

**(ராமு தனராஜா)**

மனைவியின் தலையில் பெரிய கல்ஒன்றால்தாக்கிஅவரைப்படுகொலை செய்த கணவன் கைது செய்யப்பட் டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

லுணுகலை - ஜனதாபுர , தம்பபிட்டிய வத்த கும்புக்கன் ஓயாவில் இருந்து 38 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய், தலைப் பகுதியில் காயங்களுடன் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட் டார்.

இதையடுத்து 17 வயதுடைய மகள் தனது தாயின் மரணத்தில் சந்தேகம் உள்ளது என்று பொலிஸாரிடம் கூறி னார்.

அதற்கமைய பொலிஸார் விசாரணை வேட்டையை ஆரம்பித்தனர். இதன் போது 36 வயதுடைய ஓட்டோ சாரதி ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார். அதன்பின்னர் தலை மறைவாகி இருந்த 45 வயதுடைய மேற்படி பெண்ணின் கணவர் நேற்று இரவு லுணுகலை நகரில் வைத்து லுணுகலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப் பட்ட முதற்கட்ட விசாரணையின்போது சிறிய கல் ஒன்றால் மனைவியின் தலைப் பகுதியைத் தான் தாக்கினார் எனவும், பின்னர் பெரிய கல் ஒன்றால் தாக்கிக் கொலை செய்தார் எனவும் சந்தேகநபர் தெரிவித்தார் என்று பொலிஸார் கூறினர்.

இருவருக்கும் இடையே மிக நீண்ட காலமாகக் குடும்பத் தகராறு காணப் பட்டது என்றும், இருவருக்கும் இடையே விவாகரத்து வழக்கு நடைபெற்று வரு கின்றது என்றும், பெண்ணின் வீட்டுப் பகுதிக்கு குறித்த நபர் செல்லக்கூடாது என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந் தது என்றும் பொலிஸார் தெரிவித்த னர்.

சந்தேகநபர் பொலிஸாரின் விசார ணைகள் நிறைவடைந்ததன் பின்னர் பசறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளார் என்றும் பொலி ஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### அரசியல் தீர்வு...

மனோ எம்.பியின் இல்லத்தில் நிகழ்ந்த இந்தச் சந்திப்பில் சுவிஸ் தூத ரகத்தின் அரசியல்துறை முதலாம் செயலாளர் செல்வி ஜஸ்டின் பொய்லா வும் கலந்துகொண்டார்.

இது தொடர்பில் மனோ எம்.பி. தனது எக்ஸ்-தளத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், அரசியல் தீர்வு, மலையக சமூகத்தைச் சார்ந்த பெருந்தோட்டப் பிரிவினரின் வாழ் நிலைமை ஆகியவை பற்றி சுவிட்சர் லாந்து தூதுவர் சிறி வோல்ட், அரசியல் துறை முதலாம் செயலாளர் ஜஸ்டின் பொய்லா ஆகியோரும், நானும் மிக விரிவாக உரையாடினோம்.

உண்மை, ஐக்கியம், நல்லிணக்கம் பற்றிய மசோதா மூலம் இலங்கை அரசு கொண்டுவர முயலும் உண்மை ஆணைக்குழு பற்றி பேசினோம். ஆனால், அரசியல் தீர்வு, பொறுப்புக் கூறல் ஆகிய இரண்டு விடயங்களிலும் எவ்வித அர்த்தபூர்வ முன்நகர்வும் அரச தரப்பில் செய்யப்படாத காரணத்தால், நல்லிணக்கம் இன்னமும் சாத்தியம் ஆகவில்லை. இவை இத்தனை தூரம் இழுப்பட்டுப் போவதற்குச் சர்வதேச சமூகமும் காரணமாக அமைந்து விட்டது. ஆகவே, இலங்கை தொடர்பான இதுவரை யிலான உலக சமுதாயக் கொள்கை களை மீளாய்வு செய்யுங்கள் என நான் கோரியுள்ளேன்.

மேலும், மலையகத் தமிழ் மக்கள் இந்நாட்டில், இந்நாள் வரை இழந்த அரசி யல் சமூக சமூக உரிமைகளை மீளப்பெற சுவிட்சர்லாந்து எமக்கு உதவ வேண்டும். மலையகத் தமிழர் இந்நாட்டில் சுமார் 12 மாவட்டங்களில் பரந்து வாழும் சிறு பான்மையினர் என்றபடியால், அரசியல் யாப்பு ஏற்பாடாக நிலவரம்பற்ற சமூக சபை அமைக்கப்பட வேண்டும் என நாம் முன்மொழிவு செய்து வருகின்றோம்.

எமது இந்த முன்மொழிவுகள் செம்மை யாக்கப்பட வேண்டும். அதற்காக, சுவிட் சர்லாந்து நாட்டின் நிலவரம்பற்ற சிறு பான்மையினருக்கு வழங்கபட்டுள்ள அதிகாரப் பகிர்வு அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள நாம் விரும்புகின் றோம்." - என்றுள்ளது.

### 8 மாவட்டங்களுக்கு...

களுத்துறை, கண்டி, கேகாலை, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய 8 மாவட் டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தென்கிழக்கு அரபுக் கடல், தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பிராந்தியங்களுக்குச் செல்வதை மீனவர்கள், கடல்சார் தொழில்களில் ஈடுபடுவோர் மறு அறிவித்தல் வரும் வரைத் தவிர்த்துச் செயற்பட வேண்டும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.




# உண்மையான தலைவரை இழந்து தவிக்கின்றனர் ஈரான் நாட்டு மக்கள்!

## ஈரான் ஜனாதிபதிக்கான அனுதாபச் செய்தியில் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்

ஈரான் ஜனாதிபதியின் மறைவு அந்த நாட்டுக்கு மட்டுமல்ல, முழு பிராந்தியத்துக்கும் அதற்கு அப்பாலும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தை பிரதிபலிக்கிறது. ஈரான் உண்மையான தலைவரை இழந்து தவிக்கிறது.

இவ்வாறு இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஈரான் ஜனபாதிபதியின் மறைவை அடுத்து ஈரான் பதில் ஜனாதிபதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் சஜித் பிரேமதாஸ மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதியும் ஈரான் மக்களின் அன்புக்கு உரிய தலைவருமான இப்ராஹிம் ரைசியின் அகால மரணத்துக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ரைசி தனது தொலைநோக்கு பார்வை மற்றும் அறிவு, ஆற்றலால் தனது நாடு மற்றும் மக்கள் மீது காட்டிய ஆழ்ந்த அன்பு அத்துடன் அவர் தனது கடமைகளைச் செய்த சிந்தனைத் தன்மை ஆகியவற்றின் காரணமாக ஒரு சிறந்த தலைவராக இருந்தார்.

இந்த சோகம் ஈரானுக்கு மட்டுமல்ல, முழு பிராந்தியத்துக்கும் அதற்கு அப்பாலும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தை பிரதிபலிக்கிறது. ஈரான் உண்மையான தலைவரை இழந்துவிட்டது.

ஈரானின் நீண்ட மற்றும் புகழ்பெற்ற வரலாற்றில் ஈரானியர்கள் நிறைய பொறுமையுடன் வாழ்ந்துள்ளனர். மேலும் அன்னாரின் மறைவுக்குப் பின்னர் ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஆன்மீகத் தலைவரிடமிருந்து உறுதியான மற்றும் அசைக்க முடியாத தலைமை தேவையான தருணமிது.

துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நாட்டுக்கும் அதன் மக்களுக்கும் தேவையான வழிகாட்டுதலை அவர் நிச்சயமாக வழங்குவார். இப்ராஹிம் ரைசி சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார், இலங் கையும் எனது மக்களும் அவரது அன் பான முகத்தை நேரடியாகப் பார்க்க முடிந்தது.

மிகவும் இக்கட்டான இந்த நேரத்தில் அவரது குடும்ப உறுப்பினர்கள், அன்புக்குரியவர்கள் மற்றும் ஈரான் மக்களுடன் நமது எண்ணங்களிலும் பிரார்த்தனைகளிலும் நாம் ஐக்கியமாக இருப்போம்.

பாரசீகர்களின் வரலாற்றில் அழியாத நினைவைக் குறிக்கும் அன்னாரது நீடித்த மரபுரிமையில் ஈரானியர்கள் ஆறுதல் பெறட்டும்.-என்றுள்ளது.





# ஈரான் ஜனாதிபதியின் மறைவுக்கு அநுர இரங்கல்

ஹெலிக்கொப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் ஜனாதிபதி இப்ரா ஹிம் ரைசியின் மறைவுக்கு தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஈரான் தூதரகத்துக்கு இன்று சென்ற அநுரகுமார திஸாநாயக்க எம்.பி., அங்கு வைக்கப்பட்ட இரங்கல் குறிப்பேட்டில் தனது இரங்கலைப் பதிவு செய்தார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நாளை கறுப்பு நாள்

நாளை மே 22. இலங்கை வரலாற்றில் மிக முக்கியமான நாள். 52 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தத் தினத்தில்தான் இலங்கை தன்னைத் தனித்துவமான குடியரசாக அறிவித்துக் கொண்டது.

1948 இல் பிரிட்டன் ஆட்சியதிகாரம் திணித்த சோல்பரி யாப்பின் அடிப்படையில் தன்னை சுதந்திர நாடாக அறிவித்துக் கொண்ட இலங்கை, பின்னர் தனக்கென குடியரசு யாப்பு ஒன்றை உருவாக்கிக் கொண்டு, பிரிட்டனின் பிடியிலிருந்து முற்றாகத் தன்னை விடுவித்து, தன்னை முழு சுதந்திரம் - சுயாதிபத்தியம் - பெற்ற குடியரசாகப் பிரகடனப்படுத்திய நாள் இது.

ஒட்டுமொத்த இலங்கைத் தீவைப் பொறுத்தவரை இந்த மண்ணில் சுமார் 2,500 ஆண்டுகள் நீடித்த முடியாட்சி முடிவுக்கு வந்து, குடியாட்சி நிலைநிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும், இந்தத் தீவின் இரண்டு தேசங்களில் ஒன்றாகக் காலம் காலமாக நிலை பெற்றிருந்த தமிழர் தேசத்துக்கு அவர்களின் அடிமை தளையைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அதிகார தரப்பின் மாற்றமாக மட்டுமே இத்தினம் அமைந்தது.

அதுவரையில் ஏதோ ஒரு வகையில் தமிழர் தேசம் மீதும் மேலாதிக்கம் செலுத்தி வந்த பிரிட்டிஷ் பிடி - வெள்ளையர் அதிகாரம் - முழுமையாக முடிவுக்கு வர, பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் கையில் அது வீழ்ந்த வரலாற்று நிகழ்வே இந்தக் குடியரசுத் தினம் என்பது தமிழர்களின் பட்டறிவு; கணிப்பீடு.

1970 பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசினால் ஸ்தாபிக்கப்பட்ட அரசமைப்பு பேரவை 22 மாதங்கள் பல தொடர் அமர்வுகளை நடத்தி, நாட்டின் புதிய குடியரசு யாப்பை உருவாக்கியது.

அந்தப் புதிய அரசமைப்பை உருவாக்கும் தேசிய அரசமைப்பு பேரவைக்கு பெரும்பாலான தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கைத் தமிழரசுக் கட்சி தன் கருத்துக்களை முன்வைத்தது, சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து வழங்குவதற்கான முன்மொழிவுகளை அது வழங்கிய போது பேரினவாதத்தினால் அத்திட்டம் அடியோடு நிராகரிக்கப்பட, வேறு வழியின்றி அதன் அமர்வுகளில் இருந்து தமிழர் தரப்பு வெளியேறியது.

அவர்களின் பங்குபற்றுதலின்றி உருவாக்கப்பட்டு, அவர்கள் மீதும் திணிக்கப்பட்ட இந்த முதலாவது குடியரசு யாப்பில், தமிழர் தேசத்தின் தனித்துவத்தையும் இறையாண்மையையும் வல்வந்தமாகக் கபளீகரம் செய்யும் கொள்கைத் தீர்மானங்களை உள்ளடக்கி, தனது பேரினவாத மேலாதிக்கத் திணிப்பை சட்ட ரீதியானதாகக் காட்ட நடவடிக்கை எடுத்தது சிங்களம்.

அதுவரை நடைமுறையில் இருந்த சோல்பரி யாப்பில் சிறுபான்மை தரப்புகளின் உரிமைகளை உறுதிப்படுத்த இருந்த விசேட ஏற்பாடுகள் தூக்கிக் கடாசப்பட்டன.

இலங்கை குடியரசில் பௌத்தத்துக்கும் சிங்களத்திற்கும் முதன்மையான இடத்தை வழங்க வேண்டும் என்ற மேலாதிக்க திணிப்பு, முதல் முறையாக அரசமைப்பு ரீதியான தேசியக் கடப்பாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது இந்த யாப்பின் மூலம்தான்.

தமிழர் தாயகத்தை - தேசத்தை - இலங்கை தீவில் சிங்களத்தின் கீழ் அடிமையாக்கும் சாசனத்தை - தேசியப் பிரகடனத்தை - நடைமுறைக்குக் கொண்டு வரும் சட்டமாக இலங்கை பௌத்த, சிங்கள ஆட்சி பீடம் முதன் முதலில் அறிவித்துச் செயற்படுத்தியது இந்தத் தினத்தில்தான்.

அதனால்தான் இந்தத் தினம் தமிழர் தேசத்தைப் பொறுத்தவரை அது சிங்களத்தின் முழு அடிமையாக்கப்பட்ட கறுப்பு தினம். துக்க நாள்.

1972 இல் இதே தினத்தில் கொண்டு வரப்பட்ட அரசமைப்பாகட்டும், 1978 இல் கொண்டுவரப்பட்ட நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைக்கு வழி செய்த தற்போதைய யாப்பாகட்டும், இரண்டுமே ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் சம்மதமும் இணக்கமும் பங்குபற்றுதலுமின்றி சிங்களத்தினால் தயாரிக்கப்பட்டு, தமிழர்கள் மீது வல்வந்தமாக திணிக்கப்பட்டவை. அது மாத்திரமல, சிங்களத்திடம் தமிழர் தேசத்தை அடிமைப்படுத்திய சாசனங்கள் அவை இரண்டும்.

ஆகவே தமிழர் தேசத்தை பொறுத்தவரை 52 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை தீவைக் குடியரசாகப் பிரகடனப்படுத்தி, தமிழர்களை முழுமையாக அடிமைப்படுத்திய அந்தத் தினம் - நாளைய நாள் - அவர்களுக்கு கறுப்பு நாள்தான்.



# கோமாரி மணல்சேனை தமிழ் வித்திக்கு முஷாரப் எம்.பியால் நிதி ஒதுக்கீடு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

பொத்துவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கோமாரி மணல் சேனை தமிழ் வித்தியாலயத்தின் அபிவிருத்திக்காக திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுத் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் பன்முகப்படுத் தப்பட்ட நிதியிலிருந்து 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளார்.

பாடசாலையின் அதிபர் சல்மூன் சுதன் தலைமையில் இந்த நிதி ஒதுக் கீட்டுக்கு நன்றி செலுத்தும் நிகழ்வொன்று பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது. இன, மத பேதமற்று மாவட்ட மக்களின் கல்வியை முன் னேற்ற இதய சுத்தியுடன் முஷாரப் எம்பி இயங்குகிறார் என சிலாகித்து பேசிய பாடசாலை சமூகம் நாடாளுமன்ற உறுப்பினருக்கு நன்றி யையும் கூறியது. நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப் பாளர், பிரதேச செயலக தொழிநுட்ப உத்தியோகத்தர், குறித்த பகுதியின் அபிவிருத்தி உத்தியோகத்தர், நாடாளு மன்ற உறுப்பினரின் மாவட்ட இணைப் பாளர், மக்கள் தொடர்பு அதிகாரி, பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், ஆசிரி யர்கள் என பல ரும் கலந்து கொண்டனர்.



# மாணவர்களுக்கு மீண்டும் 'சுரக்ஷா' காப்புறுதி திட்டம்!

மாணவர்களுக்கு மீண்டும் 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்த குமார் தெரிவித்துள்ளார்.

பொருளாதார பிரச்சினை காரண மாக இடைநிறுத்தப்பட்டிருந்த சுரக்ஷா மாணவர் காப்புருதி திட்டத்தை மீள ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரனில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாசலம் அரவிந்தகுமார் தெரி வித்துள்ளார்.




இதன் ஊடாக நாடளலா விய ரீதியில் உள்ள அனைத்து மாணவி யர்களும் பயனடைவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அந்த வகையில் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் பாட சாலைகளில் கல்வி பயிலும் 41 லச்சம் மாணவர்களுக்கு மீண்டும் இந்த 'சுரக்ஷா' காப்புறுதித் திட்டம் அமுல்செய் யபடும் இதன் ஊடாக மாணவர்கள் பெரும் நன்மை அடைவார்கள் என்று குறிப்பிட்டார்.



# கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவ ஆராய்ச்சி மாநாடு



(எம்.எம்.ஜெஸ்மின்)

சுகாதார அமைச்சின் ஆயுள்வேத திணைக்களமும் களணி பல் கலைக்கழக பட்டதாரி கற்கை பீடமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த சர்வதேச பாரம்பரிய மருத்துவ ஆராய்ச்சி மாநாடு கொழும்பு பல் கலைக்கழக வைத்திய பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன் போது துறைசார் வைத்திய அதிகாரிகளும், பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்டனர்.



# உலகத் தேயிலை தினத்தை முன்னிட்டு இரத்தினபுரி நகரில் இன்று பேரணி!

(ஸ்ரீனிவாசகம் இரவீந்திரன்)

உலக தேயிலை தினத்தை முன் னிட்டு இரத்தினபுரி நகரில் இன்று (21) காலை 9 மணிக்கு சமுக அபிவிருத்தி நிறுவகத்தின் ஏற்பாட்டில் சகல உரி மைகளையும் உள்ளடக்கிய மலையகம் என்ற தொனிப்பொருளில் மாபெரும் பேரணி ஒன்று இடம்பெற்றது.

இந்தப் பேரணியில் கண்டி, நுவரெ லியா, பதுளை, இரத்தினபுரி, சேகாலை உள்ளிட்ட மலையக மாவட்டங்களைச் சேர்ந்த பெருந்தோட்ட தொழிலாளர்கள், சிவில் அமைப்புக்களை சேர்ந்தவர்கள், நகர வர்த்தகர்கள் நலன் விரும்பிகள் உள்ளிட்ட சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

இந்தப் பேரணி காலை 9 மணிக்கு இரத்தினபுரி மாநகர சபை முன்றலில் ஆரம்பமாகி நகர மத்தியிலுள்ள மணிக் கூட்டு கோபுர வழியாக மீண்டும் மாநகர சபை மண்டபத்தை அடைந்தது.

அதன் பின்னர் மாநகர சபை மண்டபத்தில் கூட்டம் இடம்பெற்றது.

200 வருடமாக மலையக மக்கள் அடிமையாக உள்ளனர்.

அவர்களுக்கு சமமான சகல உரி மைகளும் இணைக்கப் பெற வேண்டும் என கோரிக்கை இதன்போது விடுக்கப் பட்டது. இரத்தினபுரி மாவட்டத்தில் தொழி லாளர்கள் அவ்வப்போது தாக்கப்படுவது முற்றாக தவிர்க்க வேண்டும் என்றும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.







### நுவரெலியா மாவட்டத்தில்

# சீரற்ற காலநிலை காரணமாக நிறைகின்றன நீர்த்தேக்கங்கள்

(மஸ்கெலியா)

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக நீர் தேக்க பகுதிகளில் நீர் வரத்து அதிகரித்துள்ளது.

குறிப்பாக மவுஸ்சாக்கலை நீர் தேக்கத்தின் நீர் தற்போது 5 அடி உயர்ந்து உள்ளது.

அதேபோல் காசல்ரீ நீர் தேக்கத்தின் நீர் மட்டம் 8 அடி உயர்ந்துள்ளது.

ஏனைய நீர் தேக்கங்களான கென்யோன், லக்சபான, நவலக்சபான, பொல்பிட்டிய, கலுகல, விமலசுரேந்திர மற்றும் மேல் கொத்மலை ஆகிய நீர் தேக்கங்களின் மட்டம் வெகுவாக உயர்ந்து செல்கிறது.

தொடர்ந்து சீரற்ற காலநிலை காரணமாகப் பெருந்தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பண்ணையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலை ஆரம்பித்து இரண்டாம் நாளில் மாணவர்களின் வருகை மிகவும் குறைந்த நிலையில் உள்ளது.

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடுமையான காற்று வீசுவதால் வாழை மரங்கள் மற்றும் ஏனைய மரங்கள் அழஜவடைந்த போயுள்ளன.

நோட்டன் – மஸ்கெலியா பிரதான வீதியில் ஆங்காங்கே மண் திட்டுகள் சரிந்து விழுந்துள்ளன.

இந்தப் பகுதியில் கடுமையான மழையுடன் கூடிய பனி மூட்டம் காணப்படுவதால் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு கண்டி வலய போக்குவரத்து பொலிஸ் அதிகாரி பணித்துள்ளார்.









# ஈரான் ஜனாதிபதி மறைவையொட்டி அரைக்கம்பத்தில் தேசியக்கொடி!

## கிண்ணியாவில் பறக்க விடப்பட்டு துக்கதினம் அனுஷ்டிப்பு

(எச். எம். ஹலால்தீன்)

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மறைவை முன்னிட்டு இன்று (21) துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

துக்க தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல அரச திணைக் களங்களில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

கிண்ணியா பிரதேச செயலாளர் அலு வலகத்திலும் தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிட்டு துக்க தினம் ஒரு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

கிண்ணியா நகர சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை, சமுர்த்தி சமுர்த்தி வங்கி , தபால் நிலையம், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை கிண்ணியா நிலையத் திலும் தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

இந்தத் துக்க தினத்தை அனுஷ்டிக் கும் முகமாக கிண்ணிய பிரதான வீதியில் உள்ள சில கடைகளிலும் தேசி யக் கொடி பறக்க விடப்பட்டுள்ளது.




குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998

# தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸைத் தேடி ராகுல் யாத்திரை நடத்த வேண்டியிருக்கும்

## அமித்ஷா இப்படி கிண்டல் பேச்சு

ஹிசார்,மே22

ஜுன் 4 ஆம் திகதிக்குப் பிறகு பைனாக் குலர் மூலம் கூட காங்கிரஸைக் காண முடியாது என்று அமித்ஷா கூறினார்.

நாடாளுமன்றத்துக்கு 5 கட்ட வாக்குப்பதிவு நிறைவடைந்துள்ள நிலையில், 6 ஆவது கட்ட தேர்தல் வருகிற 25 ஆம் திகதி நடக்கிறது. அன்றைய தினம் அரியானாவில் மொத்தமுள்ள 10 தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடக்கிறது.

எனவே அங்கு தேர்தல் பிரசாரம் தீவிரம் அடைந்து இருக்கிறது. அங்கு போட்டியிடும் பா.ஜனதா வேட்பாளர்களை ஆதரித்து மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா நேற்று பல இடங்களில் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டார்.

ஹிசாரில் நடந்த பிரசார கூட்டத்தில் உரையாற்றிய அவர் காங்கிரஸ் கட்சியை கடுமையாக சாடினார். அப்போது தனது உரையில், "முதல் 4 கட்ட வாக்குப்பதிவிலேயே பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் பா.ஜனதா 270 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்று பெரும்பான்மை பெற்று விட்டது. மீதமுள்ள 3 கட்ட தேர்தலும் முடியும்போது பா.ஜனதாவின் மொத்த எண்ணிக்கை 400 இடங்களைக் கடந்து விடும்.



காங்கிரஸ் கட்சி 40 இடங்களை கூட பெறாது. காங்கிரஸ் இளவரசர் (ராகுல் காந்தி) இந்திய ஒற்றுமை யாத்திரை மேற்கொண்டார். ஜுன் 4 ஆம் திகதிக்குப் பிறகு அவர் காங்கிரஸைக் கண்டுபிடிக்கும் யாத்திரை செல்வார். பைனாக்குலர் மூலம் கூட காங்கிரஸைக் காண முடியாது. ஒருபுறம் காங்கிரஸ் ஆட்சியில் ரூ.12 லட்சம் கோடிக்கு மேல் ஊழல் நடந்தது. மறுபுறம் குஜராத் முதல்-மந்திரியாகவும், நாட்டின் பிரதமராகவும் இருந்த மோடி '25 காசு' கூட ஊழல் செய்ததார் என யாரும் கூற முடியாது.

இந்தியாவில் கோடை வெயில் அதிகரிக்கும்போது ராகுல் காந்தி தாய்லாந்து, பாங்காக் என்று பறந்து விடுவார். ஜுன் 4 ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வெளியாகும். 6-ஆம் திகதி அவர் விடுமுறைக்காகச் சென்று விடுவார். இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

ஒருபுறம் பணக்கார குடும்பத்தில் பிறந்த ராகுல் காந்தி, மறுபுறம் ஏழை குடும்பத்தில் பிறந்த பிரதமர் மோடி. இதில் யார் வேண்டும் என்று நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். முஸ்லிம்களுக்கு காங்கிரஸ் கட்சி இடஒதுக்கீடு வழங்கி உள்ளது. நீங்கள் எங்களுக்கு 400 இடங்களை தாருங்கள், இந்த அரசியல் சாசனத்துக்கு எதிரான இடஒதுக்கீட்டை பா.ஜனதா ரத்து செய்யும்.

காங்கிரஸ் கட்சி போபர்ஸ் ஊழல், ஹெலிக்கொப்டர் ஊழல் என ஆயிரக் கணக்கான கோடி மதிப்பிலான ஊழலில் ஈடுபட்டது. உரம், அரிசி, காமன்வெல்த் விளையாட்டுகள் என ஏராளமான ஊழல்களை தங்கள் ஆட்சியில் செய்துள்ளது. விவசாயம், விளையாட்டு, இராணுவம் ஆகிய 3 துறைகளில் செய்த ஊழல்கள் மூலம் தங்கள் கஜானாவை நிரப்பியது. மோடி அரசு ரூ.20 லட்சம் கோடி அளவிலான உணவு பொருள்களை குறைந்தபட்ச ஆதரவு விலையில் கொள்முதல் செய்தது. இது சுதந்திரத்துக்கு பிறகு எந்த அரசும் செய்யாதது" என்று அமித்ஷா கூறினார்.

# டெல்லி மெட்ரோ ரயில் பெட்டிகளில் கெஜ்ரிவாலை மிரட்டும் வாசகங்கள்!

## பாரதிய ஜனதா மீது ஆம் ஆத்மி குற்றச்சாட்டு

புதுடெல்லி,மே22

டெல்லியில் ஆளும் ஆம் ஆத்மி அரசுக்கும், பா.ஜனதாவுக்கும் இடையே தொடர்ந்து மோதல் நடந்து வருகிறது. இந்த பரபரப்பான சூழலில் டெல்லியில் ஓடும் சில மெட்ரோ ரயில்களிலும், சில மெட்ரோ ரயில் நிலையங்களிலும் கெஜ்ரிவாலுக்கு மிரட்டல் விடுக்கும் வாசகங்களை யாரோ மர்ம நபர்கள் நேற்று எழுதி வைத்து உள்ளனர். இது தொடர்பான படங்கள் மாநிலம் முழுவதும் வேகமாகப் பரவி வருகிறது. இது இரு தரப்பினருக்கான மோதலை மீண்டும் தீவிரப்படுத்தி இருக்கிறது. இந்த சம்பவத்தின் பின்னணியில் பா.ஜனதா இருப்பதாக ஆம் ஆத்மி குற்றம் சாட்டியிருக்கிறது.

இது தொடர்பாக மாநில மந்திரியும், ஆம் ஆத்மி மூத்த தலைவர்களில் ஒருவருமான அதிஷி செய்தியாளர்களிடம் கூறும்போது, 'கெஜ்ரிவாலை பா.ஜனதா கைது செய்தனர். சிறையில் இன்சுலின்



ஊசியை நிறுத்தினர். அவர் சிறையில் இருந்து வெளியே வந்தபிறகு சுவாதி மாலிவாலை பயன்படுத்தி பொய் குற்றச்சாட்டுகளை கூற வைத்தனர். தற்போது அவருடைய உயிருக்கும் அச்சுறுத்தல் விடப்பட்டு இருக்கிறது' என தெரிவித்தார்.

மெட்ரோ ரயில் நிலையங்களில் கண்காணிப்புக் கமரா இருக்கும்போது, இந்த மிரட்டல் வாசகங்களை எழுதியவரை இதுவரை கைது செய்யாதது ஏன்? எனக் கேள்வி எழுப்பிய அதிஷி, இதன் பின்னணியில் பா.ஜனதா இருப்பதை இது உறுதி செய்வதாகத் தெரிவித்தார்.

# புதிய அதிபருக்கான தேர்தல் ஈரானில் ஜூன் 28 ஆம் திகதி

## உத்தியோபூர்வ அரச அறிவிப்பு வெளியானது





தெஹ்ரான்,மே22

ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி உயிரிழந்த நிலையில் அதிபர் தேர்தல் எப்போது என்பது குறித்த அறிவிப்பை ஈரான் அரசு வெளியிட்டுள்ளது.

ஈரான் அதிபர் இப்ராகிம் ரைசி, வெளியுறவுத்துறை மந்திரி உசைன் உள்பட 9 பேர் அஜர்பைஜான் நாட்டில் அணை திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு ஹெலிக்கொப்டரில் நாடு திரும்பியபோது அஜர்பைஜான் – ஈரான் எல்லை அருகே வர்சகான் கவுண்டி என்ற இடத்தில் சென்ற போது ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானது. இதில் அனைவரும் உயிரிழந்தனர் என ஈரான் அரசு அதிகாரப்பூர்வமாக செய்தி வெளியிட்டது.

இப்ராகிம் ரைசி மரணம் அடைந்தமையைத் தொடர்ந்து இடைக்கால அதிபராக தற்போதைய துணை அதிபர் முகமது முக்பர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஈரானின் அரசமைப்பின் 131 ஆவது பிரிவின்படி, அதிபர் தனது கடமைகளை நிறைவேற்ற முடியாவிட்டால், துணை அதிபர் அவரின் கடமைகளைச் செய்ய அதிகாரமுடையவர் ஆவார். மேலும், அதிகபட்சமாக 50 நாள்களுக்குள் புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய இடைக்கால அதிபர் கடமைப்பட்டவர் ஆவார்.

இந்நிலையில், ஈரானின் அதிபர் தேர்தலுக்கான திகதியை அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. அதன்படி ஈரான் நாட்டின் 14 ஆவது அதிபர் தேர்தல் ஜூன் 28 ஆம் திகதி நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஈரான் நாட்டு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் வரும் 30 ஆம் திகதி முதல் ஜூன் 3 ஆம் திகதி வரை வேட்பு மனு தாக்கல் செய்யலாம் எனவும், தேர்தலுக்கான பிரசாரம் ஜூன் 12 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து அதிபர் தேர்தல் ஜூன் 28 ஆம் திகதி நடைபெற உள்ளது.

# 4 ஆவது நம்பிக்கை வாக்கெடுப்பிலும் நேபாளத்தின் பிரதமர் பிரசந்தா வெற்றி



காத்மாண்டு,மே22

நேபாளத்தில் பிரதமர் பிரசந்தா தாம் பதவியேற்ற பின்னர் 18 மாதங்களில் நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட நான்காவது நம்பிக்கை வாக்கெடுப்பிலும் வெற்றி பெற்றார்.

நேபாளத்தில் கடந்த 2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் எந்த கட்சியாலும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையை பெற முடியாமல் போனது. இதனால், சி.பி.என். மாவோயிஸ்டு கட்சியின் தலைவர் புஷ்ப கமல் தஹல் என்கிற பிரசந்தா, முன்னாள் பிரதமர் கே.பி. சர்மா ஒலியின் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட 4 கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, மூன்றாவது முறையாக பிரதமராகப் பதவியேற்றார்.

பிரதமர் பிரசந்தா தலைமையிலான நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட் மையம்) அரசில் அங்கம் வகித்து வந்த ஜனதா சமாஜ்வாதி கட்சி (ஜே.எஸ்.பி.) தனது ஆதரவை கடந்த வாரம் திரும்ப பெற்றது. மேலும், கூட்டுறவு சங்கங்களின் நிதியில் முறைகேடு செய்ததாக அந்நாட்டு உள்துறை மந்திரி ரபி லாமிச்சானே மீது எதிர்க்கட்சியான நேபாளி காங்கிரஸ் குற்றஞ்சாட்டி, நாடாளுமன்றக் கூட்டத்தொடரை நடத்தவிடாமல் தொடர்ந்து இடையூறு ஏற்படுத்தி வருகிறது.

ஆளும் அரசில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சி தனது ஆதரவை விலக்கி கொண்டால் 30 நாள்களில் பிரதமர் நம்பிக்கை வாக்கெடுப்பு கோரி அதில் வெற்றி பெற வேண்டும். அந்த வகையில், நாடாளுமன்றத்தில் பிரசந்தா அரசு மீது இன்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்த திட்டமிட்டிருந்தனர்.

அதன்படி, நேபாள நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மொத்தமுள்ள 275 உறுப்பினர்களில் 158 உறுப்பினர்கள் பங்கேற்றனர். முக்கிய எதிர்க்கட்சியான நேபாள காங்கிரஸ் நம்பிக்கை வாக்கெடுப்பை புறக்கணித்து வெளிநடப்பு செய்தது.

இதனை தொடர்ந்து 157 வாக்குகள் பெற்று நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரசந்தா வெற்றி பெற்றார். பிரசந்தா பிரதமராக பதவியேற்ற 18 மாதங்களில் நாடாளுமன்றத்தில் நடத்தப்படும் நான்காவது நம்பிக்கை வாக்கெடுப்பு இதுவாகும். இதற்கு முன்னதாக, கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி மூன்றாவது நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெற்றது. அந்த நம்பிக்கை வாக்கெடுப்பிலும் பிரசந்தா வெற்றி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 06

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 21/05/2024

## ஓஷாவா விபத்தில் 4 பேருக்குக் காயம்

ஒன்ராரியோ, மே 21

ஓஷாவா பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

நெடுஞ்சாலை 401இல் C2



# வாகனத் திருட்டுகளைத் தடுக்க தேசிய ரீதியில் செயல் திட்டம்!

### கனடிய அரசாங்கம் அறிவிப்பு

ஒன்ராரியோ, மே 21

வாகனத் திருட்டை தடுப்பதற்கான தேசிய செயல் திட்டத்தை கனடிய அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் திருடர்களுக்கு கடுமையான தண்டனைகள், பொலிஸ், அரசு அதிகாரிகள், எல்லை அமுலாக்கப் பிரிவினருக்கு இடையே தகவல் பகிர்வு அதிகரிப்பு ஆகியவை அடங்குகின்றன.

ஒன்ராரியோ மாகாணத்தின் பிறம்டன் நகரில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அமைச்சரவை உறுப்பினர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். C2

# இஸ்ரேலுக்கு எதிரான கோஷங்களை ‘வெறுப்பு பேச்சு’ என்று அறிவியுங்கள்!

### கனடிய நாடாளுமன்றத்தில் விண்ணப்பம்

ஒன்ராரியோ, மே 21

இஸ்ரேலுக்கு எதிரான போராட்டங்களில் பயன்படுத்தப்படும் கோஷங்களை ‘வெறுப்பு பேச்சு’ என்ற வரையறைக்குள் கொண்டு வருமாறு கோரப்பட்டுள்ளது.

கனடா முழுவதிலும் அதிகரித்து வரும் இஸ்ரேல் எதிர்ப்புப் போராட்டத்தில் யூத எதிர்ப்பு சம்பவங்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான மனுவொன்று கனடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

‘ஆற்றிலிருந்து கடலுக்கு, பலஸ்தீனம் விடுதலையாகும்’, ‘ஒக்டோபர் 7 நீடூழி வாழ்க’ என்கிற கோஷங்கள் வெறுப்பினை தூண்டுபவை என இந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கனடாவில் யூத எதிர்ப்பு எண்ணக்கருக்கள் எதிர்பாராத அளவில் அதிகரித்துள்ளன என இந்த மனுவை முன்னின்று ஒருங்கிணைத்தவர் தெரிவித்துள்ளார்.





# காட்டுத் தீயால் பாதிப்புற்றோருக்கு அவசரகால நிதியுதவி வழங்கப்படும்

## மனிடோபா மாகாண அரசு அறிவிப்பு

மனிடோபா, மே 21

காட்டுத் தீயின் காரணமாக இடம் பெயரந்த மக்களுக்கு அவசரகால நிதியுதவியை மனிடோபா மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது.

காட்டுத் தீயினால் வெளியேற்றப்பட்ட கிரன்பெர்ரி போர்டேஜ் மற்றும் சுற்றியுள்ள சமூகங்கள் இதற்குத் தகுதி பெறுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மக்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் குறித்து தமக்குத் தெரியும் என மனிடோபா முதல்வர் வெப் கீய்னெவ் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அவசரகால சமூக சேவைகளுக்கு 800 மனிடோபா மக்கள் பதிவு செய்துள்ளனர் என முதல்வர் தெரிவித்துள்ளார்.




## ஒஷாவா...

கிழக்குப் பாதையில் ஸ்டீவென்சன் ரோட்டில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வாகனம் ஒன்று தடத்தை விட்டு விலகிப் புரண்டதால் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த வாகனத்தில் பயணித்த நால்வர் உயிருக்கு ஆபத்தற்ற கடும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## வாகனத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் திட்டத்தில் முதன்மையாக வாகனத் திருட்டை எதிர்த்துப் போராடுவதற்கு முன்னர் அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகளும் அடங்குகின்றன.

2022 தொழில்துறை மதிப்பீடுகளின் படி, முந்தைய ஆண்டை விட பல மாகாணங்களில் வாகனத் திருட்டு விகிதங்கள் அதிகரித்துள்ளன. கியூபெக்கில், திருட்டுகள் 50 சதவீதம் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப் படுகின்றது.

ஒன்ராரியோவில் அவை 34.5 சதவீதம் உயர்ந்துள்ளன எனவும், டொரன்டோ பெரும்பாக பொலிஸ் பிரிவுக்குள் இந்த அதிகரிப்பு 104 சதவீதமாக பதிவாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




# மனிடோபாவில் இடைத்தேர்தல் ஜூன் 18 நடக்கும் என அறிவிப்பு

மனிடோபா, மே 21

மனிடோபா மாகாணத்தின் டக்ஷிடோ தேர்தல் தொகுதிக்கான இடைத்தேர்தல் ஜூன் மாதம் 18ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மனிடோபாவின் முன்னாள் முதல்வர் ஹீதர் ஸ்டீபன்சன் மே 6ஆம் திகதி ஓய்வு பெறுகின்றார் என அறிவித்தமையால் இந்த வெற்றிடம் ஏற்பட்டது.

எனினும், புதிய ஜனநாயகக் கட்சியின் ஆளுகையின் கீழுள்ள மனிடோபா மாகாணத்தில், கட்சியின் சார்பில் பதிவுசெய்யப்பட்ட தாதியான கார்லா கொம்படனை வேட்பாளராக வெளிப்படுத்துவதற்கான தேர்தல் அறிவிப்பை புதிய ஜனநாயகக் கட்சி காலந்தாழ்த்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சட்டத்தரணிகளை ஒழுங்குபடுத்தும் புதிய சட்டத்துக்கு எதிராக வழக்கு!

## பிரிட்டிஷ் கொலம்பியாவில் சட்டத்தரணிகள் தாக்கல்


பிரிட்டிஷ் கொலம்பியா, மே 21

சட்டத்தரணிகளை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் பிரிட்டிஷ் கொலம்பியாவில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய சட்டத்திற்கு எதிராக மாகாண சட்டத்தரணிகள் மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்தப் புதிய சட்டம் சட்டத்தரணிகளினதும், ஏனைய சட்ட செயற்பாட்டாளர்களின் உரிமைகளை இல்லாது செய்வதாக சட்டத்தரணிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் சட்டத்தரணிகள் சங்கமானது சட்ட மா அதிபர் மற்றும் மாகாண அரசாங்கத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

இந்த புதிய சட்டமானது சட்டத்தரணிகள் தமது உதவிநாடிகளுக்காக நீதிமன்றத்தில் முன்னிலையாவதில் இருந்து தாக்கத்தை ஏற்படுத்தும் என சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.





# நிர்மாணப் பணி இடத்தில் எலும்புத் துண்டுகள் மீட்பு

## கட்டுமான வேலைகள் நிறுத்தம்

ஒன்ராரியோ, மே 21

பார்க்ஸ் கனடாவின் நிர்மாணப் பணிகளின் போது எலும்புத் துண்டுகள் மற்றும் ஏனையப் பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டமையைத் தொடர்ந்து, நிர் மாணப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

நான்கு நாள்களுக்கு முன்னர் நிப்பிகொன் பகுதியில் பார்க்ஸ் கனடா வின் புதிய நிர்வாக மற்றும் விருந்தினர் நிலையத்தின் நிர்மாணம் ஆரம்பிக் கப்பட்டிருந்தது.

எலும்புத் துண்டுடன் 20ஆம் நூ ற்றாண்டின் நடுப்பகுதியைச் சார்ந்த சில பொருள்களும் கண்டெடுக்கப் பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படு கின்றது.

கண்டெடுக்கப்பட்ட எலும்புத் துண்டு மனிதனுடையது அல்ல என ஆரம்ப ஆராய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் கண்காணிப்பாளர் ஒருவர் ஊடாக மேலதிக அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பார்க்ஸ் கனடா தெரிவித்துள்ளது.







# சக்தி மிக்க சூரியப் புயலினால் சமுத்திர ஆழத்திலும் தாக்கம்!

## கனடாவின் சமுத்திர வலையமைப்பு ஆய்வு

ஒன்ராரியோ, மே 21

கனடா முழுவதும் அண்மையில் வானத்தில் வடக்கின் ஒளியை உருவாக்கிய சக்தி மிக்க சூரியப் புயலானது, மாகாணத்தின் சமுத்திரங்களின் வெகு ஆழத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சூரியப் புயலால் கனடாவின் கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள தாக்கத்தைக் கனடாவின் சமுத்திர வலையமைப்பு ஆராய்ந்து வருகின்றது.

சமுத்திரத்தின் வெகு ஆழத்தில் வைக்கப்பட்டிருந்த திசைக்காட்டிகளில் இந்த சூரியப் புயல் தூண்டலை ஏற்படுத்தியதாக கனடா சமுத்திர வலையமைப்பின் பிரதம நிறைவேற்றத்திகாரி கேட் மொரான் தெரிவித்துள்ளார்.

இந்த சூரியப் புயல் புவிகாந்த விசையில் திரிவை ஏற்படுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புவியில் ஏற்படும் இயற்கை நிகழ்வுகளின் புதியதொரு வாசிப்பனுபவமாக இந்த நிகழ்வு அமைந்திருப்பதாக மொரான் தெரிவித்துள்ளார்.

# கனடா மக்களின் மத்தியில் இப்போது பிரபல்யமாகும் வீட்டுத் தோட்டங்கள்!



கனடாவில் வீட்டுத் தோட்டங்கள் அதிகளவில் தற்பொழுது பிரபல்யமாகி வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வழமையாக மே மாதத்தில் இவ்வாறு வீட்டுத் தோட்டங்களை உருவாக்கும் நடவடிக்கைகள் இடம்பெறும் என்ற போதிலும் தற்பொழுது வீட்டுத் தோட்டங்கள் குறித்து மக்கள் கூடுதல் கரிசனை காட்டி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உணவுப் பொருள்களுக்கான விலையேற்றம் காரணமாக இவ்வாறு மக்கள் வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவதில் அதிக நாட்டம் காட்டத் தொடங்கியுள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கோவிட்-19 பெருந்தொற்று காலம் முதல் கனடாவில் வீட்டுத் தோட்டங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

விக்டோரியா தின வார இறுதி நாள்களில் கூடுதல் எண்ணிக்கையில் வீட்டுத் தோட்டங்கள் உருவாக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மரபு ரீதியாகவே இந்தக் காலப் பகுதியில் சீரான காலநிலை காணப்படுவதனால் மக்கள் வீட்டுத் தோட்டங்களை உருவாக்குவர் எனக்குறிப்பிடப்படுகின்றது.

உணவுப் பாதுகாப்பு தொடர்பில் மக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளதாகவும் அநேகமான மக்கள் உணவுப் பொருள் விலை ஏற்றத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் கனடிய நாற்றுப்பண்ணை ஒன்றியத்தின் பிரதானி பில் ஹார்ட்டிலி தெரிவித்துள்ளார்.




# இந்திய மாணவர்களின் போராட்டம் கனடாவில் தொடர்ந்து முன்னெடுப்பு

கனடாவில் இந்தியாவைச் சேர்ந்த பல மாணவர்கள் படித்து வரும் நிலையில், பிரின்ஸ் எட்வர்ட் ஐலேண்ட் (Prince Edward Island) மாகாணம் திடீரெனக் குடியேற்ற விதிகளை மாற்றியுள்ளது.

இதன் காரணமாக இங்கு படித்து வரும் இந்தியாவைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள், இந்தியாவுக்கு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இந்திய மாணவர்கள் கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக போராட்டத்தில் ஈடுபட்டுவருவதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் “ஏராளமான இந்திய மாணவர்கள் கனடா சென்று படித்து வருகிறார்கள். மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் குறிப்பிடத்தகுந்த வகையிலானது. ஆனால், ஏராளமான மாணவர்கள் இந்தியாவிற்கு திரும்பும் சூழ்நிலையை எதிர்கொண்டு வருகின்றனர் என்ற தகவல் எங்களுக்குக் கிடைக்கவில்லை. இதுகுறித்து எங்களுக்கு எந்த தகவலும் வரவில்லை. இங்கொன்று, அங்கொன்று எனச்அப்படிப் பிரச்சினை இருக்கலாம். கனடாவில் இருக்கும் மாணவர்கள் மிகப்பெரிய பிரச்சினையை எதிர்கொள்வதாக நாங்கள் பார்க்கவில்லை” எனத் தெரிவித்துள்ளது.

இந்தியாவால் தடைசெய்யப்பட்ட காலிஸ்தான் குழுவின் செயல்பாடு கனடாவில் அதிகமாக உள்ளது. அதை கட்டுப்படுத்த வேண்டும் என இந்தியா தொடர்ந்து கனடாவை வலியுறுத்தி வருகிறது.

காலிஸ்தான் தலைவர் நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்திய விசாரணை அமைப்புகளுக்குத் தொடர்பு இருப்பதாக கனடா குற்றம்சாட்டியது. இதனால் இரு நாடுகளுக்கு இடையில் நட்பில் விரிசல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செயற்கை நுண்ணறிவுத் துறையில் கனடாவில் அதிக பதவி வெற்றிடம்

கனடாவில் அதிக எண்ணிக்கையில் வெற்றிடம் நிலவும் செயற்கை நுண்ணறிவு துறைசார் தொழில்கள் குறித்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் கனடாவில் குடியேறுவதற்கு திட்டமிடுபவர்கள் மற்றும் கனடாவில் நல்ல சம்பளத்துடன் தொழில் வாய்ப்பு பெற்றுக்கொள்ள காத்திருப்போருக்கு இந்தத் தகவல் உதவியாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.




மேலும் இந்த பட்டியலில் ஆய்வாளர், பொறியிலாளர், செயற்கை நுண்ணறிவு தரவு ஆய்வாளர், ரோபோ பொறியியலாளர், செயற்கை நுண்ணறிவு உற்பத்தி முகாமையாளர், இயந்திரக் கற்றல் பொறியியலாளர், செயற்கை நுண்ணறிவு ஒழுக்க நெறி பொறியியலாளர், தரவு விஞ்ஞானி உள்ளிட்ட பதவி வெற்றிடங்களுக்கு கூடுதல் தேவை நிலவி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பதவி வெற்றிடங்களுக்கு 70 ஆயிரம் முதல் ஒன்றரை லட்சம் டொலர்கள் வரையில் வருடாந்த சம்பளம் வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.